**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.4/2025 அதன் அ.வ.எண்.448/2021**

ஜானகிராமன் ... மனுதாரர்/பிரதிவாதி

–எதிர்–

1) ரகுபதி
2) பாபு
3) ஜோதிராஜ் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என்முன்பாக 01.12.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) மனுதாரர் தரப்பில் பிராது 2 ம் தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்தை எதிர்வழக்குரையுடன் எதிரிடை கோரிக்கையில் தாக்கல் செய்துள்ளார் என்றும், ஏற்கனவே எதிர்வழக்குரையை சீர்திருத்தம் செய்ய வேண்டி இ.ம.எண்.3/2024 என்ற மனு தாக்கல்

செய்யப்பட்டு, கடந்த 17.02.2024ம் தேதி அனுமதிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) இந்நிலையில், சீர்திருத்திய எதிர்வழக்குரையை தயார் செய்யும் சமயம் எதிர்வழக்குரை பாரா 18ல் 1ம் வாதி என்பதற்கு பதிலாக 2ம் வாதி என்றும், எதிர்வழக்குரை 1ம் தபசில் சொத்து விவரத்தின் வடக்கு எல்கையில் நடைபாதை என்பதற்கு பதிலாக எல்லையம்மான் கோவில் தெரு என தவறாக தட்டச்சு செய்யப்பட்ட விபரம் தெரிய வந்தது என்றும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், மேலும், மனுதாரருடைய பாகப்பிரிவினை ஆவணத்தில் வடக்கு எல்கை நடைபாதை என்றே காட்டப்பட்டுள்ளது என்றும், ஆகவே மேற்படி தவறை பொறுத்து சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே, எதிர்வழக்குரையில் சீர்திருத்த செய்ய வேண்டியது அவசியம் எனக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) எதிருரை சுருக்கம்</u>

3.1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், எதிர்வழக்குரையில் 1வது தபசில் என்று குறிப்பிடாமல் தனி தபசிலாக காட்ட விட்டு போய் விட்டது என கூறி அதனை சீர்திருத்தம் செய்யக் கேட்டு இ.ம.எண்.3/2024 தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக எதிர்மனுதாரர்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய வழக்கறிஞரிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், சீராய்வு மனுவில் நல்ல கட்சி உள்ளது என்றும், ஆகவே அதற்கு முன்பு இந்த மனுவில் ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் மேற்படி சீராய்வு மனு பாதிக்கப்படக்கூடும் என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு மனுவில் கண்டவாறு எதிர்வழக்குரையை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியம் விசாரிக்கப்படவில்லை. இரு தரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிறுத்தவில்லை.

6) இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டது. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் பிரதிவாதி ஆவார். இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் ஆவார்கள். செய்ததில், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி எதிரிடை கோரிக்கை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கானது வழக்கு எழுவினாக்கள் வனைவதற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள போது, இந்த மனு மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே எதிர்வழக்குரையினை சீர்திருத்தம் செய்ய வேண்டி இ.ம.எண்.3/2024 தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி எதிர்வழக்குரையை சீர்திருத்தம் செய்ய தயார் செய்யும் சமயத்தில் எதிர்வழக்குரையின் பாரா 18ல், 1ம் வாதி என்பதற்கு பதிலாக 2ம் வாதி என்றும், எதிர்வழக்குரை 1ம் தபசில் சொத்து

விவரத்தில் வடக்கு எல்கையில் நடைபாதை என்பதற்கு பதிலாக எல்லையம்மன் கோவில் தெரு என தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், மனுதாரரின் பாகப்பிரிவினை ஆவணத்தில் வடக்கு எல்கை நடைபாதை என மனுவில் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

9) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், இந்த வழக்கின் விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்பு எதிர்வழக்குரையினை திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரருக்கு பதில் வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது என்பதை கருத்தில் கொண்டும், எதிர்வழக்குரையை திருத்தம் செய்தால் ஒரு வேளை இந்த வழக்கினை சரியாக தீர்வு செய்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டும், இந்த மனுவை அனுமதிப்பதால் தரப்பினர்களுக்கு இடையில் உள்ள பிரச்சினைக்கு இதே வழக்கில் அறுதியாக தீர்வு காண இயலும் என்பதாலும், மேலும், இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டால் அது தரப்பினர்களுக்கு இடையே பல்வேறு வழக்குகள் எழக்கூடும் என்பதாலும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

***முடிவாக, மனுதாரர் ரூ.2000/- எதிர்மனுதாரர்களுக்கு 02.01.2026 க்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 02.01.2026.***

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம்

செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

orders uploaded on 17.12.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.12.17 16:07:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் - இல்லை
மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் - இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் - இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் - இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

orders uploaded on 17.12.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.12.17 16:07:28 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.4/2025 அதன்</u>**
**<u>அ.வ.எண்.448/2021</u>**

சீரான/ வரைவு – உத்தரவு

**<u>17.12.2025.</u>**